**நாகப்பட்டினம், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின்**
**செயல்முறை ஆணைகள்,**
**முன்னிலை: திரு. ஐ.அக்கண்டராவ், எம்.எஸ்.ஸி(விவ).,எம்.பி.ஏ.,**

எண்:அ2/ 8509 /2015

நாள்: 27.07.2022

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. ஜி.ராஜ்குமார், இளநிலை உதவியாளர் (பிணையம்) வேளாண்மை விரிவாக்க மையம், வலிவலம், கீழ்வேளூர் வட்டாரம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டது - தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி6/97428/2020, நாள். 12.02.2021.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அ2/8509/2015 நாள்: 17.02.2021.
3. அரசாணை 3(டி) எண் 46, வேளாண்மை உழவர் நலத்துறை வே.நி.பு நாள் 06.05.2022., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.

***********

ஆணை:

பார்வை 1 மற்றும் 2ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, இம்மாவட்டத்தில் கீழ்வேளூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் காவலராக பணிபுரிந்து 17.01.2014 அன்று இயற்கை எய்திய திரு. ஆர்.கோவிந்தராஜ், அவர்களது வாரிசுதாரரும் / மகனுமாகிய திரு. ஜி.ராஜ்குமார், அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு மேற்படி பணியாளர் கடந்த 17.02.2021 முற்பகல் இம்மாவட்டத்தில் கீழ்வேளூர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகக் கட்டுப்பாட்டில் உள்ள வலிவலம், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணியேற்றுக்கொண்டார்.

பார்வை 3ல் காணும் அரசாணையின்படி, தனியர் பணியேற்ற நாளான 17.02.2021 முற்பகல் அன்றைய தேதியில் அன்னாரது பணியினை இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் வரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, திரு. ஜி.ராஜ்குமார், இளநிலை உதவியாளர் (பிணையம்) அவர்களை அன்னார் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 17.02.2021 முற்பகல் முதல் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் தகுதி காண் பருவத்தினை மூன்று ஆண்டுக்காலத்திற்குள் முடிக்க வேண்டும் என உத்திரவிடப்படுகிறது.

ஒம்/- ஜா.அக்கண்டராவ்,
வேளாண்மை இணை இயக்குநர்
நாகப்பட்டினம்.

பெறுநர் : திரு. ஜி.ராஜ்குமார், இளநிலை உதவியாளர் (பிணையம்),
வேளாண்மை விரிவாக்க மையம், வலிவம்,
வேளாண்மை உதவி இயக்குநர், கீழ்வேளூர் - மூலமாக.

நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், கீழ்வேளூர்

// ஆணைப்படி //

கண்காணிப்பாளர்

G:\A2 Vani 2022- 2\Probation 2022\G.Rajkumar, Jr Asst.(S).docx

Scanned with CamScanner